நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வேதாரண்யம் பகுதியில் சவுக்கு நேரடிக் கொள்முதல் முடக்கம்: விவசாயிகள் பாதிப்பு**

கே.பி. அம்பிகாபதி

First Published : 20 Oct 2010 09:21:25 AM IST

வேதாரண்யம், அக். 19: நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் சவுக்கு மரங்களை அரசுத் துறை நிறுவனங்கள் நேரடியாகக் கொள்முதல் செய்யும் நடைமுறை முடக்கப்பட்டதால், நியாயமான விலை கிடைக்காமல் சவுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேதாரண்யம் பகுதிக்குள்பட்ட மானாவாரி நிலப்பரப்பில் பல ஆண்டுகளாக சவுக்கு மரங்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

சவுக்கு பயிரிட ஏற்ற மணல் பாங்கான நிலத்தையுடைய பெரியகுத்தகை, புஷ்பவனம், தேத்தாகுடி, கரியாப்பட்டினம், செட்டிப்புலம், கருப்பம்புலம், செண்பகராயநல்லூர், மருதூர், ஆயக்காரன்புலம், தகட்டூர் ஆகிய கிராமங்களில் சவுக்கு சாகுபடி செய்யப்படுகிறது.

அண்மைக் காலமாக நெல் சாகுபடியில் ஏற்பட்டு வரும் செலவின அதிகரிப்பு, வடிகால், பாசனம் உள்ளிட்ட பிரச்னைகள் காரணமாக நெல் வயல்களிலும் சவுக்கு மரங்களை விவசாயிகள் வளர்ப்பது அதிகரித்து வருகிறது.

எரிபொருள், இழை தயாரிப்பு, கட்டுமானம் உள்ளிட்ட தேவைகளுக்காக சவுக்கு மரங்கள் வெளியிடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அதிகரித்த எரிவாயு அடுப்பு, பிளாஸ்டிக் பொருள்களின் பயன்பாடுகளால் தேவை குறைந்ததால், சவுக்கு மரங்களுக்கான சந்தை வாய்ப்புகளும் குறைந்தன.

ஆனால், 2006-ம் ஆண்டுக்கு முன்பு ஈரோடு, பள்ளிப்பாளையம் காகித ஆலை, கோவை, திருப்பூர், திருச்சி, கரூர், காங்கேயம் உள்ளிட்ட இடங்களுக்கு அதிக அளவு சவுக்கு மரக் கட்டைகள் அனுப்பப்பட்டன.

இதையடுத்து, சந்தை விலையும் அதிகரித்தது. குறிப்பாக, 2000-வது ஆண்டில் ஒரு டன் சவுக்கின் சராசரி விலை ரூ. 800 முதல் ரூ. 2 ஆயிரமாக இருந்தது. இது 2006-ல் ரூ. 1,300 முதல் ரூ. 3,600 வரை கொள்முதல் செய்யப்பட்டது.

இந்நிலையில், உற்பத்தியாகும் சவுக்கு மரங்களை அரசு சார்ந்த காகித ஆலைகளே நேரில் கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதை ஏற்ற அப்போதைய நாகை மாவட்ட ஆட்சியர் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இதையடுத்து, தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம், கரூர் காகிதபுரத்தில் உள்ள காகித ஆலைக்கு இங்குள்ள சவுக்கு மரங்களை நேரடியாகக் கொள்முதல் செய்ய முன் வந்தது.

இதற்கான மையங்கள் தேர்வு செய்யப்பட்டு கொள்முதல் பணிகளும் தொடங்கப்பட்டன ஆனால், சில காரணங்களால் அதன் தொடர் செயலாக்கத்தில் தேக்க நிலை ஏற்பட்டு அதற்கான தொடர்பு அலுவலகங்களும் மூடப்பட்டன.

தற்போது தனியார் முகவர்கள் மட்டுமே டன் சராசரியாக ரூ. 1,600-க்கு சவுக்கை கொள்முதல் செய்கின்றனர். அதுவும் உரிய பணம் உடனடியாகவும் கிடைப்பதில்லை.

இதனால், சவுக்கு பராமரிப்புக்கு 5 ஆண்டுகளில் ஆகும் செலவினத்தைக் கணக்கிடும்போது விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து வேதாரண்யம் பகுதி சவுக்கு உற்பத்தி விவசாயிகள் கூட்டமைப்பின் தலைவர் மருதூர் தெற்கு எஸ். ஜெகநாதன் கூறியது:

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நேரடிக் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசு நிர்வாகம் செய்தது. சராசரியாக டன் ஒன்றுக்கு ரூ. 2 ஆயிரம் கிடைத்தது. நேரடியாக எடை போடப்பட்டு கழிவுகள் இல்லாமல், உடனுக்குடன் பணமும் கிடைத்தது. இது கட்டுப்படியாகும் விலையாகவும் இருந்தது.

ஆனால், ஏதோ காரணத்தால் தற்போது கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நேரடிக் கொள்முதல் முறையைச் செயல்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சவுக்கு மரத்துக்கு அரசே விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கடந்த பல ஆண்டுகளுக்கு முன்பு நடைமுறையில் இருந்ததைப்போல சவுக்குச் சாகுபடி செலவுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்க வேண்டும் என்றார் அவர்.

வேளாண் உற்பத்திக்கு பல்வேறு திட்டங்களைக் கொண்டுவரும் அரசு இங்கு உற்பத்தியாகும் சவுக்கு மரங்களையும், நாகை, திருவாரூர் மாவட்டங்களில் நெல் அறுவடைக் காலத்தில் வீணாகி வரும் வைக்கோலையும் மூலப்பொருளாகக் கொண்டு இந்தப் பகுதியில் காகித ஆலை தொடங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பு.

**ஆடு வளர்ப்போர் நலவாரிய உறுப்பினர்கள் சேர்க்கை**

First Published : 20 Oct 2010 10:24:22 AM IST

சிவகங்கை, அக். 19: சிவகங்கை மாவட்டத்தில் ஆடு வளர்ப்போர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெற்று வருகிறது என்று கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

ஆடு வளர்ப்போர் நல வாரியத்தில் சேர்வதற்கு குறைந்தது 5 ஆடுகள் வைத்திருக்க வேண்டும். 18 வயது முதல் 65 வயதுக்கு உள்பட்டவராக இருக்க வேண்டும்.

இந்த தகுதியுள்ளவர்கள் தங்களது பகுதியில் உள்ள கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்களை அணுகி இதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் கிராம நிர்வாக அலுவலர் மூலம் வழங்கப்பட்ட வசிப்பிடச் சான்றிதழ், வேறு எந்த நல வாரியத்திலும் உறுப்பினராக இல்லை என்பதற்கான சான்று ஆகியவற்றை இணைத்து கொடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மக்காச்சோளத்தில் நோய்த் தாக்குதல் குறித்து ஆய்வு**

First Published : 20 Oct 2010 09:29:21 AM IST

பெரம்பலூர், அக். 19: பெரம்பலூர் அருகேயுள்ள வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில், ஆலத்தூர் ஒன்றியத்தில் மக்காசோளப் பயிரில் நோய் தாக்குதல் குறித்த ஆய்வு திங்கள்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து, மண்ணியல் துறை வல்லுநர் பிரிஸ்கா பிளேவியா ஆகியோர் ஆய்வு செய்த பின்னர் கூறியது:

மக்காசோளத்தில் இலை கருகல் நோய் காணப்படுகிறது. பயிரின் இலைப்பரப்பில் ஈரம் இருக்கும் போது, மேலுரத்தை மண்ணில் இடாமல், பயிர்களின் மீது படுமாறு இட்டதாலும், வெயில் அதிகமாக இருக்கும் போது, மேலுரம் இட்டதாலும் இந்நோய் தாக்கியுள்ளது. இதை சரிசெய்து பயிரை காப்பாற்ற, தண்ணீரை பயிரின் மீது தெளிக்க வேண்டும். எனவே, இனிவரும் காலங்களில், மேலுரத்தை பயிர் மீது படாமல் காலை மற்றும் மாலை நேரங்களில் பொட்டாஷ் உரம் இட வேண்டும் என்றனர்.

இந்த ஆய்வின் போது, பண்ணை மேலாளர் வீ. கருப்பசாமி, ஆலத்தூர் ஒன்றிய வேளாண் உதவி இயக்குநர் இளங்கோவன் மற்றும் முன்னோடி விவசாயிகள் உடனிருந்தனர்.

**விவசாய கருத்தரங்கு**

First Published : 20 Oct 2010 12:47:42 PM IST

கோவில்பட்டி, அக். 19: உளுந்தில் விளைச்சலை அதிகரிக்கும் தொழில்நுட்பம் பற்றிய கருத்தரங்கு படர்ந்தபுளியில் நடைபெற்றது.

தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தில் வைப்பாறு துணை வடிநிலப் பகுதியான படர்ந்தபுளி கிராமத்தில், கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் நடைபெற்ற இக்கருத்தரங்குக்கு, ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியர் பூமிராஜ் தலைமை வகித்தார். உளுந்து சாகுபடிக்கான சூழ்நிலை மற்றும் ரகங்கள் பற்றியும், விதை நேர்த்தி பற்றியும் பூமிராஜ் பேசினார். விதைப்பு முறை, களை நிர்வாகம், நீர் நிர்வாகம், பயிர் பாதுகாப்பு பற்றி உதவிப் பேராசிரியர் கமல்குமார் பேசினார். இக்கருத்தரங்கில், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை, முதுகலை ஆராய்ச்சியாளர் செல்வக்குமார் செய்திருந்தார்.

**கோழிப்பண்ணை விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

First Published : 20 Oct 2010 01:26:49 PM IST

விழுப்புரம், அக்.19: கோழிப்பண்ணை விவசாயிகளுக்கு தனி நல வாரியம் அமைக்க வலியுறுத்தி விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஒப்பந்த கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் நலச் சங்கத்தின் சார்பில் செவ்வாய்க்கிழமை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் (படம்) நடைபெற்றது.

÷இதில் கோழிப்பண்ணைகளுக்கு இலவச மின்சாரம், தேசிய வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி, ஆண்டுக்கு ஒருமுறை கோழி வளர்ப்புக் கூலியை அரசே நிர்ணயம் செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

÷ஆர்ப்பாட்டத்துக்கு சங்க நிறுவனர் க. சரசுவதி தலைமை தாங்கினார், கார்த்திகேயன் வரவேற்றார், தென்னரசு, தமிழ்செல்வன், பூபாலன், சங்கர், இளவரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணகிரி செந்தில், பார்த்தசாரதி, கடலூர் கருணாநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி சஞ்சீவிராயன் வாழ்த்துரை வழங்கினார். விழுப்புரம் மண்டல பொருளாளர் மு. பரமன் நன்றி கூறினார்.

தினமலர்

**பட்டுப்புழு வளர்ப்பு மனைகட்டியவர்களுக்கு மானியம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 21,2010,03:31 IST

நாமக்கல்: நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில், கிரியா ஊக்கித் திட்டத்தின் மூலம் பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டி முடித்த 22 பயனாளிகளுக்கு 11 லட்சம் ரூபாய் மானிய உதவி வழங்கப்பட்டது.நிகழ்ச்சிக்கு கலெக்டர் மதுமதி தலைமை வகித்தார். அதில், மல்பரி நடவு செய்யும் புதிய விவசாயிகளுக்கு நடவு மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு 4,125 ரூபாய் வீதம் அதிகமாக பட்சமாக 2. 50 ஏக்கருக்கு வழங்கப்பட்டது.மேலும், 1,500 சதுர அடிக்கு கூடுதலாக பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்கும் 22 பயனாளிகளுக்கு மொத்தம் 11 லட்சம் ரூபாய் மானிய உதவி வழங்கப்பட்டது.பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குனர் கோபால்சாமி, தொழில் நுட்ப உதவியாளர் லோகநாதன், உதவி ஆய்வாளர் பரமசிவம் உட்பட பலர் பங்கேற்றனர்.

**கருந்தலை புழுவை கட்டுப்படுத்தும் "டெக்னீஸ்' ஒட்டுண்ணி பூச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 21,2010,02:25 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதியில் உள்ள தென்னை மரங்களில் கருந்தலை புழுக்களின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனை கட்டுப்படுத்த தென்னை மரங்களில் "டெக்னீஸ்' என்ற ஒட்டுண்ணி பூச்சி விடப்பட்டுள்ளது.விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 12,000 ஹெக்டேரில் 16 லட்சம் தென்னை மரங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக தென்பெண்ணை ஆற்று படுகை பகுதிகளான காவேரிப்பட்டணம், திம்மாபுரம், பெரியமுத்தூர், பெண்ணேஸ்வரமடம், நெடுங்கல், அகரம், மருதேரி, பாரூர், அரசம்பட்டி ஆகிய பகுதிகளில் அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இங்கு சாகுபடி செய்யப்படும் தேங்காய் வெளி மாவட்டங்கள் மட்டுமன்றி வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தென்பெண்ணை ஆற்று படுகை பகுதிகளில் உள்ள தென்னை மரங்களில் கருந்தலை புழுக்களின் தாக்குதல் தற்போது அதிகரித்துள்ளது.கருந்தலை புழுக்கள் வழக்கமாக பிப்ரவரியில் இருந்து மே வரை அதிக அளவில் தென்னையை தாக்கும். ஆனால், வழக்கத்துக்கு மாறாக தற்போது புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.புழுக்கள் தாக்கிய மரங்களில் உள்ள ஓலைகள் சிதைந்து காணப்படுகிறது. புழுக்களின் தாக்குதல் அதிகரிக்கும் போது அடிஓலையில் இருந்து குருத்து ஓலை வரை காய்ந்து மரங்கள் பட்டுபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தென்னை உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நெடுங்கல் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நோய் தாக்குதல் அதிரிகத்துள்ளது. இதனை கட்டுப்படுத்த ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ராஜமாணிக்கம், பையூர் மண்டல வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் மணி வேளாண் இணை இயக்குனர் ராஜன், வேளாண்மை அலுவலர் பச்சையப்பன் ஆகியோர் கொண்ட குழுவினர் நெடுங்கல் பகுதியில் உள்ள தென்னை மரங்களில் கருந்தலை புழுக்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும் "டெக்னீஸ்' என்ற ஒட்டுண்ணியை விடும் மேலாண்மை தொழில் நுட்பங்கள் செய்து வருகின்றனர்.இது குறித்து ஆழியார் தென்னை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் ராஜமாணிக்கம் கூறியது:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தென்னையில் ஏற்கெனவே ஈரியோஃபைட் நோய் தாக்குதலால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கருந்தலை புழுக்களின் தாக்குதலும் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் ஒருங்கிணைந்த மேலாண்மை தொழில் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும்.நோய் தாக்கிய மரங்களில் டெக்னீஸ் என்ற ஒட்டுண்ணியை விவசாயிகள் விட வேண்டும். இந்த வகை ஒட்டுண்ணி கருந்தலை புழுக்களின் முட்டைகளின் மேல் இனப்பெருக்கம் செய்வதால் கருந்தலைபுழுக்களின் வளர்ச்சி முழுமையாக தடுக்கப்படுகிறது.ஒரு ஏக்கரில் உள்ள தென்னை மரங்களில் 21 பாக்கெட் "டெக்னீஸ்' பூச்சிகளை விவசாயிகள் விட வேண்டும். ஒரு பாக்கெட்டில்

100 பூச்சிகள் இருக்கும். ஒரு பாக்கெட் பூச்சியின் விலை 50 ரூபாயாகும். ஒட்டுண்ணி பூச்சிகளை பெற விரும்பும் விவசாயிகள் அருகில் உள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை அனுகலாம். தென்பெண்ணை ஆற்றில் வரும் பெங்களூரு சாக்கடை நீரை தென்னை மரத்துக்கு பாய்சுவதால் கருந்தலை புழுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளது. நோய் தாக்குதல் குறையும் வரை அந்த தண்ணீரை தென்னை மரங்களுக்கு பாய்ச்ச கூடாது. கருந்தலை புழுக்களை அழிக்க விவசாயிகள் ஒருங்கிணைந்த மேலாண்மை தொழில் நுட்பங்களை கையாள வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**முசிறியில் ராஜராஜன் 1,000 நெல்சாகுபடி செய்ய உதவி வழங்கல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 21,2010,02:45 IST

முசிறி: முசிறி வேளாண் துறை உதவி இயக்குனர் ராஜாமணி விடுத்த அறிக்கை:முசிறி வேளாண் கோட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளை உற்சாகப்படுத்தும் விதமாக 3,000 ஆயிரம் ரூபாய்க்கான விதை, உயிர் உரம், நுண்சத்து, ரசாயன பொருள் மற்றும் மார்க்கர், கோனோரீடர் கருவி ஆகியவை இலவசமாக வழங்கப்படுகிறது.வேளாண் விரிவாக்க மையம் முசிறி மற்றும் புலிவலம் துணை வேளாண்மை விரிவாக்க மையம் ஆகிய பகுதிகளிலும் தேவையான இடுபொருள் வழங்கப்படுகிறது. முசிறி கோட்டத்தில் 1,300 ஹெக்டேர் அளவில் ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக குணசீலம், முசிறி, புலிவலம், ஏவூர், மூவானூர், மேலசந்தப்பாளையம் ஆகிய பகுதியில் 450 ஹெக்டேர் பரப்பளவில் இம்முறையில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் தகுந்த நீர் வடிகால் வசதி செய்து கொண்டு விவசாயிகள் ராஜராஜன் 1,000 நெல் சாகுபடி செய்து பயன்பெறலாம்.ஆர்வமுள்ள விவசாயிகள் முசிறி வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள வேளாண் அலுவலர்களை நேரில் சந்தித்து நெல் சாகுபடி செய்து அதிக லாபம் பெற்று பயனடையலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தோடுமீன் சீசன் துவக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 21,2010,02:42 IST

குளச்சல் : குளச்சலில் தோடுமீன் சீசன் துவங்கியதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இயற்கை துறைமுக நகரமான குளச்சலில் 350-க்கும் அதிகமான விசைப்படகுகள், ஆயிரக்கணக்கான கட்டுமரங்கள், பைபர் படகுகளிலில் மீனவர்கள் மீன்பிடித்தொழில் செய்து வருகின்றனர். கடந்த சில மாதங்களாக கணவாய்மீன், செந்நவரை, நாக்கண்டம், தோட்டுக்கணவாய், சூரைமீன் உள்ளிட்ட பல்வேறு வகையான மீன்கள் மீனவர்கள் வலையில் சிக்கியது. நேற்று முதல் தோடுமீன் சீசன் துவங்கியுள்ளது. கடல்பகுதியில் உள்ள பாறைகளில் மீது

அதிக அளவு ஒட்டியிருக்கும் தோடுகளை மீனவர்கள் கட்டுமரங்கள், வள்ளங்கள் மூலம் சென்று புல் இழைக்கபயன்படுத்தும் புல் இழைப்பான் போன்ற கருவியால் செதுக்கி எடுத்து வருகின்றனர். குளச்சல் கடல் பகுதியிலிருந்து மேற்கு பகுதிகளில் அதிக அளவு பாறைகள் காணப்படுவதால் தோடுகள் அதிக அளவு கிடைக்கின்றன.

பாறைகளில் இருக்கும் தோடுகளை எடுக்க கடல்நீரில் மூழ்க வேண்டியிருப்பதால் கண்ணின் பாதுகாப்பிற்கும், தோடுகள் தெளிவாக தெரியும் படியாகவும் அதற்கென விசேஷமாக தயாரிக்கப்பட்ட கண்கண்ணாடி அணிந்துதான் மீனவர்கள் தோடுமீன் பிடிக்கும் பணியில் ஈடுபடுவர். தோடுமீனின் உட்பகுதியில் இருக்கும் இறைச்சிப்பகுதி மிகவும் சுவையானதாக இருப்பதால் இதை வாங்கிச் செல்ல வியாபாரிகளும் பொதுமக்களும் போட்டிப் போடுகின்றனர். இதனால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**குமரி மாவட்டத்தில் தேங்காய் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 21,2010,02:41 IST

புதுக்கடை : குமரி மாவட்டத்தில் தேங்காய் விலை கிடுகிடு என உயர்ந்துள்ளதால் தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம் இயற்கை எழில் மிக்க மாவட்டமாகும். வானுயர்ந்து நிற்கும் தென்னை மரங்கள் இம்மாவட்டத்தின் அழகை மெருகூட்டுகிறது. தென்னை மரத்தில் இருந்து கிடைக்கும் தேங்காய் சமையல் செய்வதற்கும் பயன்படுகிறது. தேங்காயில் இருந்து கிடைக்கும் தேங்காய் எண்ணெய் சமையல் செய்வதற்கும் மற்றும் பிற தேவைகளுக்கும் பயன்படுகிறது. இவ்வாறு பொதுமக்களின் அன்றாட தேவைகளில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கும் தேங்காயின் விலை அண்மை காலமாக வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருந்தது.

இதனால் தென்னை விவசாயிகள் மிகவும் கவலை அடைந்தனர். தென்னை விவசாயிகள் பலர் தென்னை மரங்களை வெட்டி அழித்து ரப்பர் நடத்துவங்கினர். மூன்று மாத்ததிற்கு முன் ஒரு கிலோ தேங்காய் 7 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பின்னர் தேங்காயின் விலை படிப்படியாக உயரத்துங்கியது. தற்பொழுது ஒரு கிலோ தேங்காய் 14 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அடுத்த மாதம் சபரிமலை சீசன் துவங்குகிறது. சபரிமலை சீசன் துவங்கினாலே தேங்காய்களுக்கு கிராக்கி அதிகம் ஏற்படும். இதனால் தேங்காய் விலை மீண்டும் உயர வாய்ப்புள்ளது என வியாபாரி ஒருவர் தெரிவித்தார். தேங்காய் விலை உயர்வால் தென்னை விவசயிகள் மிகவும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**மக்காச்சோளம் கொள்முதல் நிலையம் வேப்பூர் விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,00:59 IST

சிறுபாக்கம் : வேப்பூர் பகுதியில் மக் காச்சோளம் பயிருக்கு அரசு கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க் கின்றனர். சிறுபாக்கம், மங்களூர், மலையனூர், ஒரங்கூர், பனையாந்தூர், வேப்பூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பெரியநெசலூர், அரியநாச்சி, கழுதூர், சேப் பாக்கம், அடரி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள் தங்களின் மானாவாரி விளை நிலங்களில் அதிகளவில் பாரதி, ராசி, பயோனியர், காவேரி, கார்கில் ஆகிய ரக மக்காச்சோள பயிர் விளைவித்துள்ளனர். தற்போது கதிர் உருவாகும் நிலையில் உள்ளது. இதனை உடுமலைப் பேட்டை, தூத்துக்குடி, பொள்ளாச்சி பகுதிகளிலிருந்து மொத்த வியாபாரிகள் இடைத்தரகர்கள் மூலம் குறைந்த விலைக்கு கொள்முதல் செய்கின்றனர். அதிக விளைச்சல் தரும் மக்காச்சோள பயிருக்கு நியாயமான விலை கிடைக்க மங்களூர் அல் லது வேப்பூர் பகுதியில் அரசு கொள்முதல் நிலையம் திறக்க வேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க் கின்றனர்.

**மணிமுக்தா பாசன விவசாயிகள் ஏக்கம் : 4,250 ஏக்கரில் சாகுபடி கேள்விக்குறி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,01:10 IST

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சி அடுத்த மணிமுக்தா அணையில் நீர் பிடிப்பு குறைவாக உள்ளதால் பாசன விவசாயிகள் கவலையில் மூழ்கியுள்ளனர். கள்ளக்குறிச்சி பகுதியில் கோமுகி மற்றும் மணிமுக்தா அணைகள் உள்ளது. கோமுகி அணை கல்வராயன் மலை அடிவாரத்தில் உள்ளதால் மழை பெய்த சில நாட்களிலேயே நீர் வரத்து அதிகரித்து, அணை நிரம்பிவிடும். ஆனால் மணிமுக்தா அணை நிரம்புவதற்கு, தொடர்ந்து பலத்த மழை பெய்தால் மட்டுமே நீர் வரத்து அதிகரிக்கும். கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த பலத்த மழையால் கோமுகி அணைக்கு நீர் வரத்து அதிகரித்து.

கோமுகி அணையின் மொத்த கொள்ளளவான 561 மில்லியன் கன அடியில் (46 அடி) தற்போது 393 மில்லியன் கன அடி (41 அடி) நீர் பிடிப்பு உள்ளது. அணையிலிருந்து விவசாய பாசனத்திற்காக கடந்த 13ம் தேதி தண்ணீரை கலெக் டர் பழனிசாமி திறந்து விட்டார். வரும் 27ம் தேதி வரை 15 நாட்களுக்கு புதிய பாசனத்திற்கு 50 கன அடி தண்ணீரும், பழைய பாசனத்திற்கு 60 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அதனை தொடர்ந்து 28ம் தேதி முதல் 45 நாட்களுக்கு புதிய பாசனத்திற்கு 100 கன அடியும், பழைய பாசனத்திற்கு 120 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படும்.

மேலும் புதிய பாசனம் மூலம் 5 ஆயிரம் ஏக்கர் நிலமும், பழைய பாசனம் மூலம் 5,860 ஏக்கர் நிலமும் பாசனம் பெறுகிறது. புதிய பாசனத்தில் 7 கிராமம் மற் றும் பழைய பாசனத்தில் 11 அணைக்கட்டுகள் மூலம் 33 கிராமங்களும் பாசன வசதி பெறுகிறது. இதேபோல் மணிமுக்தா அணை பகுதிகளில் தொடர்ந்து சில நாட்கள் பலத்த மழை பெய்தாலும் அணைக்கு நீர் வரத்து குறைவாகவே இருந்தது. இதனால் மணிமுக்தா அணை பாசன விவசாயிகள் பெரும் கவலையடைந்தனர். இந்த அணையின் மொத்த கொள்ள ளவான 736 மில்லியன் கன அடியில் (36

அடி உயரம்) தற்போது 74 மில்லியன் கன அடி (20 அடி உயரம்) தண்ணீர் இருப்பு மட்டுமே உள்ளது. பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும் என்றால் 355 மில்லியன் கன அடி (30 அடி உயரம்) நீர் பிடிப்பு உயர வேண்டும். ஆண்டுதோறும் அக்., 2ம் தேதி பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட வேண்டும்.

தற்போது அணையில் குறைந்தளவே நீர் பிடிப்பு உள்ளதால் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுவதற்கு வாய்ப்பில்லை. இந்த அணை பாசனத்தை நம்பி 9 கிராமங்களில் 4,250 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக மணிமுக்தா அணையில் தொடர்ந்து இது போன்ற சூழ்நிலை நிலவி வருவதால் பாசன விவசாயிகள் கவலையில் மூழ்கியுள்ளனர். மேலும் இந்த அணையை நம்பியுள்ள பாசன விவசாயிகள் வருண பகவான் கருணை காட்டுவது எப்போது என்ற ஏக்கத்தில் தவித்து வருகின்றனர்

**உளுந்து விதைப்புப் பணிகளை துவக்க மழைக்காக காத்திருக்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,23:24 IST

தியாகதுருகம் : மானாவாரியில் உளுந்து விதைப்பு பணிகளை துவக்க மழையை எதிர் பார்த்து தியாகதுருகம் பகுதி விவசாயிகள் காத்திருக்கின்றனர். தியாகதுருகம் மற்றும் ரிஷிவந்தியம் பகுதியில் ஆண்டுதோறும் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மானாவாரியில் விவசாயிகள் உளுந்து பயிரிட்டு லாபம் ஈட்டி வருகின்றனர். வறட் சியை தாக்குப்பிடித்து வளர்ந்து மகசூல் தரும் உளுந்து பயிரை பலரும் ஆர்வமுடன் பயிரிட்டு வருகின்றனர். ஆண்டுதோறும் அக்., முதல் வாரத்தில் உளுந்து விதைப்பு பணிகளை விவசாயிகள் துவக்குவது வழக் கம். கடந்த மாதம் பெய்த மழை ஈரத்தை கொண்டு நிலத்தை உழுது பண்படுத்தி வைத்துள்ளனர். கடந்த ஏழு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்தாண்டு மானாவாரி நிலங்களில் கம்பு சாகுபடி செய்து பெரும்பாலான விவ சாயிகள் நல்ல மகசூலை பெற்றனர். அதன் தொடர்ச் சியாக உளுந்து விதைப்பு பணிகளை துவக்க விசாயிகள் மழைக்காக காத்திருக்கின்றனர்.

இவ்வாண்டு எதிர்பார்த் தபடி வடகிழக்கு பருவமழை இன்னும் துவங்கவில்லை. இதற்கு மாறாக கடந்த சில நாட்களாக கடும் வெயில் நிலவுகிறது. இதனால் மண்ணின் ஈரத் தன்மை குறைந்து வறட்சியாக காணப்படுகிறது. மழை பெய்வது தாமதமானால் பருவம் தவறி எதிர் பாத்த மகசூல் கிடைக்காமல் போய்விடுமோ என் றும் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். விரைவில் மழை பெய் யும் என்ற நம்பிக்கையோடு விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

**நெல் நடவு செய்து தரும் பசுமை படை விவசாயிகள் குறை தீர்க்க புதிய முயற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 20,2010,02:41 IST

கூலியாட்களால் சிரமப்படும் விவசாயிகளின் குறையை தீர்க்க, சேலம் மாவட்ட கிராமத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பசுமைப் படையினர் நெல் நடவு செய்து தருகின்றனர். வேளாண் கூட்டுறவு சங்கங்களின் இந்த புதிய முயற்சி, விவசாயிகளுக்கு உதவிகரமாக

அமைந்துள்ளது.தமிழகத்தில் ஆண்டுதோறும் குறுவை, சம்பா, தாளடி என 55 லட்சம் ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், விவசாயத்தில் கூலி குறைவு, விவசாய கூலியாக இருப்பதை கவுரவக் குறைச்சலாக கருதுவது ஆகிய காரணங்களால், விவசாயத்தில் கூலியாட்கள் பற்றாக்குறை அதிகரித்துள்ளது.இதை சமாளிக்க, தற்போது நெல் நடவு முதல் அறுவடை வரை அனைத்து பணிகளையும் குறைந்த செலவில் இயந்திரங்களின் மூலம் செய்து முடிக்க வேளாண் துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. கிராமப்புறங்களில் உள்ள ஏழை விவசாயிகளால் வேளாண் கருவிகளை அதிக விலை கொடுத்து வாங்கி பயன்படுத்த முடியாது.இதனால், கிராமப்புறங்களில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள், வேளாண் கருவிகளை கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு வாடகைக்கு விட நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனவரி மாதம் தமிழகத்தில் முதன் முறையாக சேலம் மாவட்டம், காடையாம்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில், "அக்ரோ சர்வீஸ் சென்டர்' துவங்கப்பட்டு, விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் வாடகைக்கு விடப்பட்டது.
இரண்டாவது அக்ரோ சர்வீஸ் சென்டர் மேட்டூர் தாலுகா, நவப்பட்டி வேளாண் கூட்டுறவு சங்கத்தில் துவங்கியது. சங்கத்தின் மூலம் ரூ.12 லட்சம் மதிப்பிலான டிராக்டர், நடவு இயந்திரம், களையெடுக்கும் கோனாவீடர், பவர் வீடர், புல் வெட்டும் புஷ் கட்டர் உள்பட 12 கருவிகள் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படுகிறது.நடவு இயந்திரத்தை இயக்க விவசாயிகளுக்கு போதிய பயிற்சி இருக்காது என்பதால், அக்ரோ சர்வீஸ் சென்டர் துவங்கப்பட்டுள்ள கூட்டுறவு சங்கம் அமைந்துள்ள கிராமங்களில் தற்போது பசுமை படை என்ற குழு உருவாக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்க மாவட்ட இணை பதிவாளரால் துவங்கப்பட்ட பசுமை படையின் ஒரு குழுவில் விவசாயத்தில் ஆர்முள்ள இளைய தலைமுறையை சேர்ந்த 5 முதல் 10 உறுப்பினர்கள் உள்ளனர். கூலியாட்கள் கிடைக்காமல், இயந்திரத்தின் மூலம் நெல் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள், இந்த பசுமை படையை அணுகினால், அவர்களே நாற்றங்கால் அமைத்து நெல் நாற்றுகளை வளர்த்து, இயந்திரத்தின் மூலம் சாகுபடி செய்தும் கொடுத்து விடுகின்றனர். இதற்காக, இயந்திரத்தின் வாடகையையும் சேர்த்து ஏக்கருக்கு 2,000 முதல் 2,500 ரூபாய் வரை கூலியாக பெற்று கொள்கின்றனர்.

இது குறித்து, சேலம் மாவட்டம், நவப்பட்டி பஞ்சாயத்தில் உள்ள பசுமைப் படையை சேர்ந்த அர்ஜூனன் கூறியதாவது: எங்கள் பசுமை படையில் ஐந்து உறுப்பினர்கள் உள்ளனர். நான் பட்டப்படிப்பு முடித்துள்ளேன், விவசாயத்தில் உள்ள ஆர்வத்தால் இந்த படையில் சேர்ந்துள்ளேன். எங்களுக்கு வேளாண் கருவிகள் இயக்க கூட்டுறவு சங்கம் பயிற்சி அளித்துள்ளது.குறிப்பிட்ட சீஸனில் மட்டுமே விவசாய வேலையில் வருவாய் கிடைக்கும். மற்ற நேரத்தில் வருவாய் கிடைக்காது என்ற காரணத்தால் தான் ஏராளமானோர் விவசாய தொழிலை புறக்கணிக்கின்றனர். நாங்கள் கூட முழுமையாக விவசாயத்தை நம்பாமல், வேறு வேலை செய்து கொண்டு, விவசாய வேலைகளையும் கவனிக்கிறோம்.

ஒரு ஏக்கரில் நெல் நடவு செய்ய கூலியாட்கள் 2,000 முதல் 2,200 ரூபாய் வாங்குகின்றனர். நாங்கள் நாற்றங்கால் அமைத்து நெல் நாற்றுகளை வளர்த்து, நடவு செய்வதற்கே அதே தொகையை வாங்குகிறோம். கூலியாட்கள் கிடைக்காத விவசாயிகள், தற்போது எங்களை நாடி வருகின்றனர். எங்களுக்கும் விவசாயத்தின் மூலம் பகுதிநேர வருவாய் கிடைக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## கொள்முதல் விலை ரூ.380 வரை அதிகரிப்பு பருப்பு வகைகள் உற்பத்தி இலக்கு 1.65 கோடி டன்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை – ஜூன்) 1.65 கோடி டன் பருப்பு வகைகளை உற்பத்தி செய்ய, மத்திய வேளாண் அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது. இது, சென்ற 2009–10 பருவத்தில் 1.45 கோடி டன்னாக இருந்தது. உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில், மத்திய அரசு, பருப்பு வகைகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை (கொள்முதல் விலை) குவிண்டாலுக்கு ரூ.380 வரை அதிகரித்துள்ளது.

அமைச்சரவை ஒப்புதல்

பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு, புதன்கிழமையன்று, ரபி பருவ (அக்டோபர்–மார்ச்) வேளாண் விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு ஒப்புதல் அளித்தது. இதன்படி, ஒரு குவிண்டால் கோதுமைக்கான விலை ரூ.20 உயர்த்தப்பட்டு ரூ.1,120–ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய மாற்றங்களின்படி, ஒரு குவிண்டால் பாசிப்பருப்புக்கான கொள்முதல் விலை ரூ.380 அதிகரிக்கப்பட்டு ரூ.2,250–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பச்சைப்பயறு விலை ரூ.340 உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது இதற்கான கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.2,100–ஆக உள்ளது.

ஒரு குவிண்டால் கடுகுக்கான கொள்முதல் விலை ரூ.20 அதிகரித்து ரூ.1,850–ஆக உயர்ந்துள்ளது. குங்குமப்பூவின் விலை ரூ.1,680–லிருந்து ரூ.1,800–ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. பார்லி விலை ரூ.750–லிருந்து ரூ.780–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பருப்பு வகைகள் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. எனினும் உள்நாட்டில் தேவை அதிகமாக உள்ளதால் ஆண்டுக்கு சுமார் 40 லட்சம் டன் பருப்பை இறக்குமதி செய்து வருகிறது.

தேவைப்பாடு

தற்போது நம் நாட்டில் பருப்புக்கான தேவைப்பாடு சுமார் 1.90 கோடி டன் என்ற அளவில் உள்ளது. ஆனால் உற்பத்தி 1.50 கோடி டன்னுக்கு குறைவாகத்தான் உள்ளது. நடப்பாண்டில் கரீஃப் பருவத்திற்கான (ஜூன்–அக்டோபர்) பருப்பு கொள்முதல் விலை அதிகரிக்கப்பட்டதால், இப்பருவத்தில் பயிரிடும் பரப்பளவு கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால் பருப்பு உற்பத்தி 60 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, சென்ற ஆண்டின் இதே பருவத்தில் 43 லட்சம் டன்னாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

விலை நிர்ணய ஆணையம்

குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்த அறிவிப்பை, ஒவ்வொரு பருவத்திலும் விதைப்பு பணிகள் தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக அறிவிக்க வேண்டும் என்ற மரபு உள்ளது. அப்போதுதான், எந்த பயிர் லாபம் தரக்கூடியது என்பதை விவசாயிகள் முடிவு செய்து சாகுபடி பணிகளை மேற்கொள்ள இயலும். வேளாண் விளைபொருள்களுக்கான விலை நிர்ணய ஆணையம், முக்கிய விளைபொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குறித்த பரிந்துரைகளை மத்திய விவசாய அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கும். பொதுவாக மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்திற்குள் கரீஃப் பருவத்திற்கான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## விலை பன்மடங்கு அதிகரித்துள்ளதால் பாகிஸ்தானுக்கு தக்காளி ஏற்றுமதி அதிகரிப்பு



*ஜெயஸ்ரீ போஸ்லே – மாதவி சாலி*

*பூனா / சண்டிகார்*

*பாகிஸ்தானில் தக்காளி விலை வரலாறு காணாத அளவில் உயர்ந்துள்ளது. எனவே, இந்த வாய்ப்பை பயன்படுத்தி லாபம் ஈட்டும் வகையில், நம் நாட்டு விவசாயிகள் அதிக அளவில் தக்காளியை அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர். எனவே, பாகிஸ்தானில் இந்தியாவின் தக்காளி விற்பனை சூடுபிடித்துள்ளது. அடுத்த சில மாதங்கள் வரை பாகிஸ்தானுக்கான ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*விலை உயர்வு*

*கடும் வெள்ளத்தால் பாகிஸ்தானில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், அந்நாட்டில் தக்காளி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்தியாவைக் காட்டிலும் அங்கு பத்து மடங்கு விலை அதிகமாக உள்ளது. தக்காளி உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள மகாராஷ்டிராவில் ஒரு கிலோ தக்காளி விலை ரூ.7.50–ஆக உள்ளது. இது, பாகிஸ்தானில் ரூ.70–80 என்ற அளவில் உள்ளது. இது தக்காளி ஏற்றுமதியாளர்களுக்கு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது.*

*ஆசியாவின் மிகப் பெரிய தக்காளி மற்றும் வெங்காயம் ஏற்றுமதி மையம் பிம்பால்கான் ஆகும். இங்கு ஏற்றுமதி நடவடிக்கைகள் விறுவிறுப்படைந்துள்ளன. ஏற்றுமதி தேவை*

அதிகரித்துள்ளதால் உள்ளூரிலும் தக்காளி விலை அதிகரிக்க தொடங்கியுள்ளது. பொதுவாக அக்டோபர் மாதத்தில் இங்கு ஒரு கிலே தக்காளி விலை ரூ.15 என்ற அளவில்தான் இருக்கும். ஆனால் இப்போது விலை ரூ.30 என்ற அளவை நெருங்கி உள்ளது.

விளைநிலங்கள்

வெள்ளம் காரணமாக பாகிஸ்தானில் 1.70 கோடி ஏக்கர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் 100 கோடி டாலர் மதிப்புக்கு பொருட்சேதம் ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது. வெள்ளப் பாதிப்பு காரணமாக பருத்தி, கரும்பு, நெல், மக்காச்சோளம், பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த பொருள்களை அந்நாடு அண்டை நாடுகளில் இருந்து அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக இந்தியாவிலிருந்து பொருள்களை அதிகம் வாங்கும் என்று கூறப்படுகிறது.

135 டிரக்குகள்

இந்நிலையில் அமிர்தசரஸிலிருந்து தினமும் 135 டிரக்குகளில் லாகூருக்கு தக்காளி செல்வதாக சுங்க இலாகா அதிகாரிகள் தெரிவித்தனர். ஒவ்வொரு டிரக்கும் 16 டன் தக்காளியைக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 70 டிரக்குகள் வங்காளதேசத்துக்கு செல்வதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

ஆதாயம் ஈட்டும் நோக்கத்தில் அண்டை நாடுகளுக்கு பெருமளவில் தக்காளி அனுப்பப்படுகிறது. எனினும் இது உள்நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக குஜராத், ராஜஸ்தான், உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் தக்காளி அளிப்பு குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த மாநிலங்கள் அவற்றுக்கு தேவையான தக்காளியை மகாராஷ்டிராவிலிருந்துதான் கொள்முதல் செய்கின்றன. ஆனால் மகாராஷ்டிரா மாநிலம் ஏற்றுமதியில் தீவிரமாக உள்ளதால் அண்டை மாநிலங்களுக்கு வரத்து குறைந்து போயுள்ளது என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கோவை விமானநிலைய விரிவாக்கம்: விவசாய நிலத்தை கையகப்படுத்த மறு ஆய்வு கலெக்டரிடம் விவசாயிகள் முறையீடு

கோவை,அக்.21–

கோவை விமான நிலைய விரிவாக்கத்துக்கு மறு ஆய்வு நடத்தி, நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானநிலைய விரிவாக்கம்

கோவை விமானநிலைய விரிவாக்கத்துக்கு, விவசாய விளைநிலங்கள் கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், மாற்று நடவடிக்கைகளை வற்புறுத்தியும் கொங்குநாடு முன்னேற்ற கழக அமைப்பாளர் ஜி.கே.நாகராஜ் தலைமையில்

வாழ்வுரிமை பாதுகாப்பு இயக்க தலைவர் சி.ஜெயபால், செயலாளர் ஆர்.குமார் மற்றும் நில உரிமையாளர்கள் கலெக்டர் உமாநாத்தை சந்தித்து முறையிட்டனர்.
கலெக்டரிடம் விவசாயிகள் பாதுகாப்பு இயக்கம் அளித்துள்ள மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:–
கோவை விமானநிலைய விரிவாக்கத்துக்கு, கையகப்படுத்த உத்தேசித்துள்ள 613 ஏக்கர் நிலத்தில், சுமார் 300 ஏக்கர் காளப்பட்டி, இருகூர், நீலாம்பூர் கிராமங்களை உள்ளடக்கிய விவசாய நிலங்கள் ஆகும். இந்த நிலங்களை கையகப்படுத்தினால் குடியிருப்புகள், நூற்பாலைகள், சிறுதொழிற்சாலைகள் பாதிக்கப்படுவதுடன், 20 ஆயிரம் தென்னை மரங்கள் அழிக்கப்படும் அபாயம் உள்ளது. மேலும் 10 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் நிலை உள்ளது.

புதிய சாலை

தற்போது அவினாசி சாலையில் இருந்து, பழைய கைவிடப்பட்ட புறவழிச்சாலை வழியாக விவசாய நிலங்களை கையகப்படுத்தி, விமான நிலையத்திற்கு சாலை அமைக்க உத்தேசித்துள்ளது கைவிடப்பட வேண்டும். அரசு நிலத்திலேயே விவசாய நிலங்களை கையகப்படுத்தாமல் சாலை அமைத்துக்கொள்ள வேண்டும். இந்தசாலையை எல்.அண்டு டி புறவழிச்சாலையுடன் இணைக்க, கண்டய்னர் கார்ப்பரேசன் வழியாக ஏற்கனவே அரசு நிலம் உள்ளது. இந்த வழியாக சாலை அமைத்தால் அத்தப்பகவுண்டன்புதூர், சின்னியம்பாளையம், நீலாம்பூர் பகுதிகள் பெரும் வளர்ச்சி பெறும். மேலும் அவினாசி ரோட்டின் போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்படும். தவிர்க்க முடியாத காரணங்களினால், விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்படுமானால், அதற்குண்டான இழப்பீட்டு தொகை என்ன என்பதை தெளிவாக தெரியப்படுத்த வேண்டும்.
விவசாயிகள், நிலங்களை இழப்போர் அடங்கிய குழுவை அமைத்து, அனைத்து முடிவுகளையும் எடுக்க வேண்டும்.
இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டு இருந்தது.

மறு ஆய்வு

இந்த பிரச்சினை குறித்து கலெக்டர் உமாநாத் விவசாயிகளிடம் விவாதித்தார்.
இதுகுறித்து ஜி.கே.நாகராஜ் கூறும்போது, விவசாயிகளின் கோரிக்கைப்படி, புதிய சாலை அமைக்கும் விவகாரம் குறித்து மறு ஆய்வு செய்ய நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் உறுதி அளித்துள்ளார். மேலும் விவசாய நிலம் கையகப்படுத்தும் நிலை ஏற்படும்போது, அதிகப்பட்ச இழப்பீடு தொகை வழங்கவும், மாவட்ட வருவாய் அதிகாரி தலைமையில் குழு அமைத்து விவசாயிகளின் கோரிக்கை குறித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட இருப்பதாகவும் கலெக்டர் கூறி உள்ளதாக தெரிவித்தார்.
யு.கே.சண்முகம், அரசூர் அசோகன், ஆர்.செல்வராஜ், பழனிச்சாமி, கோபாலகிருஷ்ணன், தங்கவேல், கோபால் உள்பட இந்த சந்திப்பின்போது உடன் இருந்தனர்.

# வேளாண்மை செய்திகள்

### ஒரு ஏக்கர் நிலத்தில்

# சொட்டுநீர் பாசனம் மூலம் தக்காளி சாகுபடி

## பல்லடம் விவசாயி சாதனை



துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ் 2.5 ஏக்கர் நிலத்தில் சொட்டுநீர் பாசனம் மூலம் தொடர்ந்து 4 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகிறார் பல்லடம் விவசாயி தனபால். தற்போது அவரது தோட்டத்தில் 1 ஏக்கர் பரப்பில் தக்காளி சாகுபடி செய்து வருகிறார்.

இது குறித்து விவசாயி தனபால் கூறியதாவது:–

### சொட்டுநீர் பாசனம்

துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் மூலம் 1 ஏக்கர் நிலத்தில் தக்காளி சாகுபடி செய்து வருகிறேன். இதற்காக யு.எஸ்.618 என்ற உயர்ரக விளைச்சல் தரும் தக்காளி விதைகளை முதலில் தேர்வு செய்தேன். நடுவதற்கு தேவையான நாற்றுக்களை தனி இடத்தில் அமைத்துக் கொண்டேன்.

கோவை வேளாண்மை பல்கலைக்கழகம் மூலம் வழங்கப்பட்ட குழி தட்டுக்களை பயன்படுத்தி அதில் நார்கழிவுகளை திரப்பி ஒவ்வொரு குழியிலும் ஒரு விதை என்ற அளவில் வைத்தேன். இந்த தட்டுக்களை ஒன்றின் மீது ஒன்று என்ற அளவில் பத்து வருமாறு வரிசை அமைத்துக் கொண்டேன். இதன் மீது காற்று புகாமல் இருக்க படுதாவை போர்த்தினேன். அதன் பிறகு 3 நாட்கள் கழித்து படுதாவை அகற்றி விதைகளை நிழலில் பரப்பி வைத்தேன். தினமும் காலை மாலை என 2 முறை பூவாளியைக் கொண்டு நீர் தெளித்தேன். 20 நாட்களில் நாற்று நடவு செய்யும் அளவுக்கு நன்றாக வளர்ந்து இருந்தது.

### நாற்று நடவு

நாற்று நடவு செய்வதற்காக முதலில் நிலத்தை கலப்பை கொண்டு இரண்டு முறை உழவு செய்தேன். அதன் பின்னர் 4 டன் அளவுக்கு தொழு உரமும், 2 டன் அளவு கோழி எருவும் இட்டேன். அதை தொடர்ந்து 7 மூட்டை சூப்பர் பாஸ்பேட் இட்டு கொக்கி கலப்பை கொண்டு 2 முறை உழவு செய்தேன். அதன் பிறகு தொடர்ச்சியாக 10 மணி நேரம் நீர் பாய்ச்சினேன். நிலப்பரப்பு முழுவதும் நன்றாக நனைந்து ஈரப்பதத்துடன் இருந்தது. இதில் 60–க்கு 60 சென்டிமீட்டர் இடைவெளியில் நாற்றுக்களை நடவு செய்தேன்.

நாற்றுகளை நட்ட பின்னர் தினமும் ஒரு மணி நேரம் நீர் பாய்ச்சினேன். 3 நாட்களுக்கு ஒரு முறை தவறாமல் உரத் தொட்டி மூலம் நீரில் கரையக்கூடிய உரங்களான பாஸ்பேட், யூரியா ஆகியவைகளை இட்டு வந்தேன். நடவு செய்த 20 நாட்களில் ஒரு களை எடுத்தேன். இதற்காக 8 கிலோ பியூரிடான் வைத்து நாற்றுகளுக்கு லேசாக மண் அணைத்தேன். அதன் பிறகு 40–வது நாளில் மறு களை எடுத்தேன். அதன் பிறகு வேப்பம் புண்ணாக்கு 100 கிலோ இட்டு மீண்டும் ஒரு முறை மண் அணைத்தேன். சரியான நேரத்தில் மருந்துகளை தெளித்து பராமரித்து வந்தேன். நடவு செய்த 70–வது நாளில் காய்கள் அறுவடைக்கு தயாராக இருந்தது.

### நிறைவான மகசூல்

அதன் பின்னர் காய்களை அறுவடை செய்து தரம் பிரித்து லாரிகள் மூலம் மார்க்கெட்டுகளுக்கு அனுப்பி விற்பனை செய்தேன். 25 கிலோ தக்காளி ரூ.320 முதல் ரூ.550 வரை விற்பனை ஆனது. இந்த திட்டம் மூலம் மண் இறுக்கம் இல்லாமல் எப்போதும் பொல பொல தன்மையுடன் இருந்தது. இதனால் பயிருக்கு போதுமான காற்றோட்டமும், சூரிய வெளிச்சமும் கிடைத்தது. அதே சமயத்தில் பயிர் நன்கு செழித்து வளர்வதற்கு ஏதுவான நிலையும் ஏற்பட்டது. இதன் வாயிலாக சாதாரண நிலையில் பயிர் செய்வதைவிட 2 மடங்கு கூடுதல் மகசூலையும் பெற முடிந்தது.

இந்த துல்லிய பண்ணை திட்டத்தை தொடர்ச்சியாக கடைப்பிடிப்பதன் மூலம் எந்த வகையான காலநிலையிலும் நிறைவான மகசூலை பெற முடிந்தது. அதே நேரத்தில் நல்ல விலையும் கிடைத்ததால் நிறைவான லாபத்தையும் பெற முடிந்தது.

இவ்வாறு விவசாயி தனபால் கூறினார்.

# மழையை சேமித்து வறட்சியில் பயிர் காக்க உதவும் பண்ணைக்குட்டை

" நீரின்றி அமையாது உலகு" என்றார் வள்ளுவர். வேளாண்மையில் போதிய நீரும், வளமான மண்ணும் உயிர் நாடி ஆகும்.

புவியியல் அமைப்பு படி தமிழ்நாடு மிக குறைந்த நிலத்தடி நீரை கொண்டதாக இருக்கிறது. எனவே மழைநீரை நம்பித்தான் பெரும்பாலான விவசாயிகள் இருக்க வேண்டிய நிலை எதிர்காலத்தில் இருக்கும். மானவாரி புஞ்சை நிலங்களில் மழை நீரை சேமித்து பயிர்களுக்கு தேவைப்படும் சமயத்தில் அளிப்பது இயலாத ஒன்று. அதிக மழைபெறும் காலங்களில் வெள்ளமும், மண் அரிமானமும், மண் அரிமானத்தில் மண்வளப்பாதிப்பும் தவிர்க்க முடியாத ஒன்றாகிறது.

மழைக்காலத்தில் பெய்து வீணாகும் மழைநீரை சரியான படி சேமித்தால் வறட்சிக்காலத்தில் பயன்படுத்திக் கொள்ள முடியும். பொதுவாக எதிர்பாராத வறட்சி விவசாயிகளை அதிர்ச்சிக்குள்ளாக்குகிறது. இந்த நிலையை சமாளிக்க வயல் தோறும் பண்ணைக்குட்டைகள் அமைக்கலாம்.

இந்த பண்ணைக்குட்டை என்பது வீணாகும் கழிவுகளை உரமாக சேமிக்கவும், பெய்யும் மழை நீரை சேமிக்கவும் என்று இரண்டு வகையிலும் பயன்படும் ஒரு அமைப்பு.

புஞ்சை நிலங்களில் சேமிக்கப்படும் மக்கு உரம் பயிர்களுக்கு சத்தான உணவாக இருக்கும். இதில் சேமிக்கப்படும் மழைநீரானது, வறட்சியில் பயிர்கள் வாடாமல் காப்பாற்றவும் உதவும். இதனை உரக்குழி அல்லது எருக்குழி என்றும் வைத்துக் கொள்ளலாம்.

மண்வளம் பராமரிக்க மக்கு உரங்கள், தொழு உரங்கள் இடுவது அவசியமாகும். நன்கு மக்காத எருவை வயலில் இடும் போது களைவிதை முளைத்து பரவுகிறது. சாகுபடி செலவு அதிகமாகிறது. பயிரானது களைச்செடியுடன் நீருக்கும், ஊட்டச்சத்திற்கும் போட்டியிடுவதால், மகசூல் குறைகிறது. மழைநீரை சேமிக்க பயன்படும் பல நுட்பங்களில் " வயல் தோறும் உரக்குழி " சிறந்த ஒன்றாக உள்ளது. திருவள்ளுவர் நீர் சேமிப்பின் அவசியத்தை கூறும் போது, " ஏரினும் நன்றாம் எரு இடுதல் இட்டபின்

நீரினும் நன்றதன் காப்பு" என்கிறார். அதாவது உழுவதை விட எருவிடுதல் சிறப்பு. நீர் விடுவதை விட நீரை சேமிப்பது அவசியம் என்கிறார். மக்கு உரம் சேமிப்பிற்கும், மண்வளப்பாதுகாப்பிற்கும் புஞ்சை நிலங்களுக்கு ஒரே தீர்வு பல்நோக்கு எருக்குழி அமைப்பதே ஆகும். இந்த குழி வெள்ளசேதத்தை தடுக்கவும் உதவும்.

### எருக்குழி அமைப்பு

ஒரு ஏக்கர் நிலத்தில் குறைந்தது 1 சென்ட் பரப்பளவில் 8 க்கு 5 மீட்டர் அல்லது 10 க்கு 4 மீட்டர் அளவில் 1 மீட்டர் ஆழத்திற்கு குழி வெட்ட வேண்டும். சமமான நிலங்களில் சாலை வசதி இருப்பின் சாலை ஓரங்களிலோ, அல்லது வயலின் நடுவிலோ வெட்டலாம். லேசான சரிவு உள்ள நிலங்களில் தாழ்வான பகுதியை அறிந்து எருக்குழி வெட்ட வேண்டும். வெட்டி எடுக்கும் மண்ணில் பெரும்பகுதியை வயல்பரப்பினை பலப்படுத்தவும், எருக்குழியை சுற்றி அணைகட்டவும் பயன்படுத்தலாம். ஒரு சென்ட் பரப்பளவில் அமைக்கப்படும் எருக்குழியின் கொள்ளளவு 40 கனமீட்டர், அதாவது 40 ஆயிரம் லிட்டர் தேக்கி வைக்கும் அளவாக இருக்கும்.

மழை பெய்யும் போது, ஒரு ஏக்கர் பரப்பளவில் மண் கண்டம் நனைந்த பிறகு வழிந்தோடும் மழை நீர் தானாக இந்த குழிக்கு வந்து தேங்கும். இதனை தக்க சமயத்தில் எடுத்து பயன்படுத்தலாம்.

மானவாரி நிலங்களுக்கு முதல் போக சாகுபடியில் அதாவது ஜூன், ஜூலை மாதங்களில் எரு விட வேண்டும். அதற்கேற்ப ஜனவரியிலிருந்து ஜூன் வரை எரு சேமித்து எருக்குழியாகவும், ஜூலையிலிருந்து டிசம்பர் வரை பண்ணைக்குட்டையாகவும் பயன்படுத்தலாம்.

### கரும்பு வயலில் எருக்குழி

எருக்குழி அமைப்பதை கரும்பு பயிரிடும் இறவை நிலங்களிலும் மேற்கொள்ளலாம். இதனால் சோகை உரிந்து அப்புறப்படுத்தும் செலவு குறைவதுடன், தேவையான மக்கு உரம் அதே வயலில் தயாரிக்கலாம். அதே வயலில் எருக்குழி அமைக்கும் போது சோகையை எரிப்பதால் மக்கு உரம் இழப்பு ஏற்படுவது, மண்ணிலுள்ள நன்மை பயக்கும் நுண்ணுயிர்கள் அழிவது மற்றும் மறுதாம்புப் பயிரின் முளைப்பு பாதிப்பும் தவிர்க்கப்படுகிறது. குழியில் நிரம்பியிருக்கும் காலத்திலும், அதன் கொள்ளளவில் பாதிக்கு மேல் மழை நீரை தாங்கும். வாழைத் தோட்டத்தில் வாழைக்கழிவுகளான சருகு, வெட்டிய பக்கக்கன்றுகள், தண்டுகள், வெட்டிய கிழங்குகள் ஆகியவற்றை சேமித்து மக்கு எரு தயாரிக்கலாம். தென்னந்தோப்பில் கிடைக்கும் தேங்காய் மட்டை மற்றும் இதர கழிவுகளை சேமித்து மக்கு எரு தயாரிக்கலாம். மணிலா, சூரியகாந்தி, கம்பு, மக்காச்சோளம், பருத்தி, மிளகாய் போன்ற பயிர்களின் கழிவுகளையும் மக்க வைக்கலாம்.

எருக்குழி ஒவ்வொரு வயலிலும் சிறிய நீர் தேக்கமாக செயல்படுகிறது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் உயரும். நிலத்தின் மேற்பரப்பிலும், நிலத்தடியிலும் தேக்கப்படும் நீரால் வாயு குளிர்ந்து குளிர்ந்த மேகங்களால் மழை வரும். இந்த குழிகளின் நடுவிலும் இலந்தை, நெல்லி, மா, சப்போட்டா, தேக்கு, இலவு, கிளிசிரிடியா போன்ற மரங்களை நடலாம்.

இதில் குறிப்பிடதக்க விஷயம், களர் மற்றும் உவர் நிலங்களில் மேம்பட மழைநீர் வழிந்தோட வடிகால் அமைக்க வேண்டும். புன்செய் நிலப்பகுதியில் எருக்குழி அமைப்பதில் ஒருங்கிணைந்து விவசாயிகள் செயல்பட வேண்டும். அவ்வாறு செய்தால், அதிக மழை பெறும் நாட்களில் வழிந்தோடும் மழைநீரை சேமித்தும், அதனால் நிலத்தடி நீர் உயரவும், மக்கிய எரு தயாரிப்பும், சேமிப்பும் உறுதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டு விவசாயிகள் இப்படி வயலுக்குவயல் எருக்குழி அமைத்தால் மழைநீர் வழிந்தோடி வீணாகாமல் காப்பாற்றபடும். விலைமதிப்பில்லாத நன்னீர் சேமிப்பினால் வருங்கால சந்ததிகளின் நீர்த்தேவை பாதுகாக்கப்படும்.